## Let us pray. ..

Praise the Lord: இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்தி வரவேற்கிறோம்.
கிறிஸ்துவின் தேவசமாதானம் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்வதாக.
கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். (ஏசாயா 65:24)
Bible says about the people blessed by the LORD: Before they call I will answer; while they are still speaking I will hear.
*என்று சொன்ன நம்முடைய தேவனிடம் மன்றாடுவதற்கு முன் ஒரு சில வசனங்களை தியானிப்போம்.*

**கொலோசெயர்/Colossians 3:23-24** (பக்கம் 277)

நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் **கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**
Whatever you do, work at it with all your heart, as working for the Lord, not for men, since you know that you will receive an inheritance from the Lord as a reward. It is the Lord Christ you are serving. (NIV)
Work willingly at whatever you do, (NLT)
And whatsoever ye do, do it heartily, (KJV)
Whatever may be your task, work at it heartily (from the soul),. (AMP)

பல நண்பர்கள் என்னிடம் சொல்வதுண்டு…..
"நீங்கள் சொல்வது சரி…ஆனால் சூழ்நிலைகள் அதற்கு இடம் கொடுக்கவில்லையே" என்று சொல்வார்கள்.
சூழ்நிலைகளுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஆமென்.

கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்ய …ஒரு கருத்தை எப்பொழுதும் மறக்காதீர்கள்…..
நாம் ஒன்றகூடி கிறிஸ்துவுக்காக பிரயாசப்படுகிறோம்.
ஒன்றுகூடியிருப்பது நம்மைப்போன்ற மனிதர்களுடன்,
வேலைசெய்வது கிறிஸ்துவுக்காக.
நாம் நம்மைப்போன்ற மனிதர்களுடன்தான் ஒன்றுகூடி,
கிறிஸ்துவுக்காக வேலை செய்கிறோமென்பதை தயவுசெய்து மறக்கவேண்டாம்.
We work together for Christ…………..But we work with human like us.

இதற்கான இரண்டு சத்திய வார்த்தைகளை கவனியுங்கள்.
*கிறிஸ்து எப்படிப்பட்டவர்?*
CHRIST: "சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கிறது."
"all fullness dwell in Christ" (Colossians 1:19)
*நாம் எப்படிப்பட்டவர்கள்?*
HUMAN: "நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே:"
என்று அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் கூறினார்கள்.
"We too are only men, human like you"
the apostles Barnabas and Paul said. (Acts 14:15)
நமக்கு பலவீனம் உள்ளதுதான். அதை அப்படியே எடுத்துக்கொண்டு வாழ்வோமானால், அது கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்க்கை இல்லை.
So we all have weakness, BUT we can not just take the weakness as granted…..
தேவனுடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை: சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, **அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.**
Nothing in all creation is hidden from God's sight. Everything is uncovered and laid bare before the eyes of him to whom we must give account. (Hebrews 4:13)

இந்த வசனம் நம்மிலே ஜீவிக்குமானால்……
நம்முடன் கூடி வேலை செய்யும் நபராலே நமக்கு ஒரு இடர்பாடு வந்தாலும், அதினாலே நம்முடைய கடமைகளிலோ, நம்முடைய வாயின் வார்த்தைகளிலோ தவறிவிடாமல் கவனம் வைப்போம்.
மற்றவர்கள் தவறுக்கு அல்ல, நம்மைக் குறித்தே தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.
If this word is in us live and well……
We may get any problem/conflict with our co worker, still, we must be careful in our responsibilities, our words and action.
Not for other's action…..for every action of ours……we must give account.

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. (சங்கீதம்/Psalms 19:14)
May the words of my mouth and the meditation of my heart be pleasing in your sight, O LORD, my Rock and my Redeemer.
Let the words of my mouth and the meditation of my heart Be acceptable in Your sight…..(NKJV)
என்று சொல்லி ஜெபிப்பதோடு, அப்படி நடந்துகொள்ள நாம் பிரயாசப்பட விரும்புவோம்,
விருப்பத்தின்படி ஓடுவோம், விளையச்செய்கிற கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங்கீதம்/Psalms 119:71-72)
It was good for me to be afflicted so that I might learn your decrees. The law from your mouth is more precious to me than thousands of pieces of silver and gold. (NIV)
என்று சொல்லி ஜெபிப்பதோடு, அப்படி **கற்றுக்கொண்டதை பின்பற்ற பிரயாசப்பட விரும்புவோம்,**
விருப்பத்தின்படி ஓடுவோம், விளையச்செய்கிற கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

கொலோசெயர்/Colossians 3:23-24
**கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**
*இதற்கு முன்வசனமான* **கொலோசெயர்/Colossians 3:22வது** வசனத்தை வாசியுங்கள்.
வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள். (கொலோசெயர்/Colossians 3:22)
Servants, obey in all things your masters according to the flesh; not with eyeservice, as menpleasers; but in singleness of heart, fearing God; (KJV)
not with eyeservice (NIV), ….. not just when they are watching you. (NLT)
fearing God; (KJV) , ……. reverence for the Lord. ……(NIV)

***வேலைக்காரரே, எஜமான்களுக்கு கீழ்ப்படியுங்கள். தேவனுக்குப் பயப்படுங்கள்.***
*இதற்கு அடுத்ததாக உள்ள* **கொலோசெயர்/Colossians 4:1** வசனத்தை வாசியுங்கள்.
எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள். (கொலோசெயர் 4:1)
***எஜமான்களே, உங்களுக்கும் எஜமான் இருக்கிறாரென்று அறியுங்கள்.***
*வேலைக்காரர்….எஜமான் அனைவரும் அறியவேண்டியது….*
*இதற்கு இடையிலே உள்ள* **கொலோசெயர்/Colossians 3:25** வசனத்தை வாசியுங்கள்.
……தேவனிடத்தில் பட்சபாதமே இல்லை. (கொலோசெயர் 3:25)
….தேவனிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை…(யாக்கோபு 1:17)
...தேவன் அநீதியுள்ளவர் இல்லை…..(எபிரெயர் 6:10)
….. there is no favoritism. (NIV) ..and there is no partiality. (NKJV)

இப்படிப்பட்ட தேவனுக்கு நாம் ஊழியம் செய்கிறோம் என்பதை மனதிலே வைத்தால்,
எந்த சூழ்நிலைகளும் நம்மை பெலவீனப்படுத்தாது. ஆமென்.

**……………….**
*பல வருடங்களுக்கு முன், ஒரு இந்திய பிரதமர், தன்னுடைய அரசாங்கத்திலுள்ளவர்களுக்கும் அதன்பிறகு மக்களுக்கும் ஒரு ஆலோசனையாக ஒரு சிறிய வாக்கியம் ஒன்றைச் சொன்னார்கள்.*
*Many years ago,…* one of the Indian Prime Minister walk into the parliament and to the people, said one statement.
**அதை இன்று ஒரு சிறிய ஆலோசனையாக உங்கள் முன் வைக்கிறேன்.**
**இதை நீங்கள் மேலும் தியானித்து சரி என்று கர்த்தர் உணர்த்தினால்,**
**கர்த்தருடைய காரியத்தில், இதை கடைபிடிக்க முயற்சிசெய்யுங்கள்.**

**Work more Talk less**

"கர்த்தருக்காக பிரயாசப்படுவதை அதிகப்படுத்தி, பேச்சைக் குறைப்போம்…."
**இந்த சிறிய ஆலோசனையை ஜீவனுள்ள வசனத்தின்படி தியானிப்போம்.**

*work more…*

**1 கொரிந்தியர் /1 Corinthians 15:58**

கர்த்தருடைய கிரியையிலே **எப்பொழுதும்** பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.
Always give yourselves fully to the work of the Lord (NIV)
Always work enthusiastically for the Lord (NLT)
always abounding in the work of the Lord (KJV)
always abounding in the work of the Lord [always being superior, excelling, doing more than enough in the service of the Lord] (AMP)

*talk less..*

**நீதிமொழிகள் / Proverbs 10:19**

சொற்களின் **மிகுதியில்** பாவமில்லாமற்போகாது:
**When words are many, sin is not absent. (NIV)**
**Too much talk leads to sin. (NLT)**
**In the multitude of words sin is not lacking, (NKJV)**
**In a multitude of words transgression is not lacking (AMP)**

நம் பலவீனங்களை நாம் மேற்கொள்ள, ஆண்டவரிடம் மன்றாடி அவருடைய பலத்தைப் பெறுவோம். மற்றவர்கள் பலவீனங்கள் உங்களைத் தாக்கி, அதனாலே நீங்கள் பலவீனமடைந்தால், அது உங்கள் பலவீனம்.

எங்களுக்குள்ளே உள்ளவர் பெரியவர் என்று சொன்னால்,
எப்படி மற்றவர்கள் பலவீனம் எங்களைத் தாக்கும்.?
எங்கள் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்று சொன்னால்,
எப்படி மற்றவர்கள் பலவீனம் எங்களைத் தாக்கும்.??
மற்றவர் பலவீனத்தாலே நான் சொற்களை மிகுதியாகக் கொட்டினால்…
நானும் பலவீனன். எனக்கும் மற்றவர்க்கும் என்ன வித்தியாசம?

நம் பலவீனங்கள் நம்மைத்தாக்காமல் இருந்தால், நம் சொற்கள் பணிவாகவும் ஜெபமாகவும் மாறும். அந்த ஜெபம் கேட்கப்படும். **கர்த்தர் மற்றவர்கள் பெலவீனத்தை மாற்றுவார்.**
**நமது ஐக்கியம் கிறிஸ்துவுக்குள் வளரும். கிறிஸ்துவும் நமக்குள் வளர்வார். ஆமென்.**

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே சிலுவைமரணத்துக்கு முன் ஜெபிக்கும்பொழுது:…
**பிதாவே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.** என்று ஜெபித்தார்
I have glorified You on the earth. I have finished the work which You have given Me to do. (NIV) (John 17:4)
கிறிஸ்துவுக்குள் வாழும் சகோதர சகோதரிகளே!
நாமும் இப்படிச் சொல்லக்கூடிய தகுதியை அடைய, நம்மை தேவன் ஆசீர்வதிப்பாராக.

**இந்த ஜீவனுள்ள வசனங்கள் நம்மிலே ஜீவித்துவளர,**
**கர்த்தர் நம்மை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

## Let us Pray